செ.வெ.எண் : 28/ மே நாள் : 27.05.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட விருப்பமுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அழைப்பு

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கொரோனா பெருந்தொற்று நோய் இரண்டாம் அலை பரவலை தடுக்கும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் 19.05.2021 அன்று நடைபெற்றது.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் தன்னார்வ தொன்டு நிறுவனங்களை ஒருங்கிணைத்திட மாநில மற்றும் மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநில குழுவிற்கான மின்னஞ்சல் முகவரி: tnngocoordination@gmail.com

தன்னலம் கருதா தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட இக்குழுக்கள் பாலமாக செயல்படும். தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் கீழ்கண்ட இணையத்தில் https://ucc.uhcitp.in/ngoregistration பதிவு செய்து இந்த அரும்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கூடுதல் விபரங்களுக்கு மாவட்டங்களில் செயல்படும் ஒருங்கிணைப்பு குழுவின் உறுப்பினரான மாவட்ட சமூகநல அலுவலரை அணுகவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 9150346853

மின்னஞ்சல் முகவரி: district27@tncwrm.in

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**